# சமய பொதுமை

## 1. தாயுமானவர்

| | |
|---|---|
| தந்தை பெயர் | கேடிலியப்பர் |
| தாயார் பெயர் | ஜெகவல்லி அம்மையார் |
| மனைவி பெயர் | மட்டுவார் குழலி |
| பிறந்த ஊர் | திருமறைக்காடு (வேதாரண்யம்) |
| இவரது காலம் | கி.பி 18– ஆம் நூற்றாண்டு. |

- இவர் விஜயரங்க சொக்கநாத நாயக்கரிடமும் அவர் மறைவுக்கு பின், அவர் மனைவி ராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராக பணியாற்றினார்.
- இவர் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு ஆவார். முக்தி பெற்ற இடம் ராமநாதபுரத்தின் அருகிலுள்ள (இயற்கை எய்திய இடம்) இலட்சுமிபுரம் ஆகும்.
- தாயுமானவரின் பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்ட தொகை நூல் தாயுமான '**சுவாமிகள் திருப்பாடல் திரட்டு**' என்று அழைக்கப்படுகிறது. இந்நூலில் 1452 பாடல்கள் உள்ளன.
- இறை நெறியை வலியுறுத்தும் இந்நூல் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றப்படுகின்றது.
- இவரது பாடல்கள் இறை நெறியை வலியுறுத்துவதோடு சித்தாந்த கருத்துக்களையும், சைவ சமய கருத்துக்களையும் உள்ளடக்கியது.
- துறவு வாழ்க்கையில் நாட்டம் கொண்டு துறவு பூண்ட இவரின் பாடல்கள் இறைவனைத் தவிர, மீதியுள்ள யாவையும் நிலையற்றவையே என்ற பொருள்பட அமைந்திருக்கும்.

## 2. இராமலிங்க அடிகளார்

- கடலூர் மாவட்டம் சிதம்பரம் மாவட்டத்திலுள்ள மருதூரில் 05.10.1823– இல் இராமையா– சின்னம்மை இணையர்க்கு ஐந்தாவது மகனாக இராமலிங்கர் பிறந்தார்.
- இராமலிங்கர் பிறந்த ஆறாவது திங்களில், தந்தையார் மறைந்ததால், குடும்பத்தினர் சென்னைக்கு குடி பெயர்ந்தனர்.
- இராமலிங்கத்தின் தமையனார் புராணச் சொற்பொழிவுகள் நடத்தி வருவாய் ஈட்டினார்.
- பள்ளிக்கு இராமலிங்கனாரை அனுப்பியும் அவருக்கு படிப்பில் நாட்டம் ஏற்படவில்லை. எனினும் ஒன்பதாம் அகவையிலேயே பாடல் புனையும் திறன் பெற்று இருந்தார்.

**அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும் சகத்தேதிருத்த'**

- இறைவன் தன்னை வருவிக்க உற்றதாக கூறுவார்.
- பின்னாளில் வள்ளலார் என்று அனைவராலும் போற்றப்பட்டார்.
- இராமலிங்கர் இளமையிலே சொற்பொழிவாற்றும் திறமை பெற்றிருந்தார்.
- ஒருமுறை இராமலிங்கனாரின் தமையனார் உடல்நிலை காரணமாக சொற்பொழிவாற்ற செல்ல இயலவில்லை. ஒன்பது வயதான இராமலிங்கனார் மேடை ஏறி தமையன் வர இயலாமை குறித்து கூறினார். பின்னர் தாமே பெரிய புராணத்துலிருந்து சொற்பொழிவு ஆற்றினார். மெய்மறந்து கேட்ட பெரியோர்கள் அடுத்தடுத்த

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

நாளிலும் இராமலிங்கனரையே சொற்பொழிவாற்றும்படி கூறினர்.

- மக்கள் அனைவரும் சாதி, சமயம், கோத்திரம், குலம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு இல்லாமல் வாழ வேண்டும் என கூறினார்.

**உத்தம மனிதர் இராமலிங்கனார்**

- திருவெற்றியூர் சந்நதி வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில், அமர்ந்திருப்பார் திகம்பர சாமியார்.அவ்வழியில் செல்லும் மனிதர்களின் குணங்களுக்கேற்ப, 'அதோ மாடு போகிறது: ஆடு போகிறது: நாய் போகிறது: நரி போகிறது' என்று விலங்குகளின் பெயரால் கூறுவார். ஆனால் ராமலிங்கர் அவ்வழியே சென்ற போது இதோ ஓர் **உத்தம மனிதர்** போகிறார் என்று கூறினார்.

**வள்ளலாரின் முழக்கம்:**

'அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை'

**வள்ளலார் அருளிய பாடல்களும் அவரது தமிழ் பற்றும்:**

- வள்ளலார் அருளிய ஆறு தொகுதிகள் கொண்ட பாடல்களை திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர்.
- சென்னையில் உள்ள கந்தகோட்டத்து இறைவனை பாடியுள்ள பாடல் தொகுப்பு தெய்வமணிமாலை.
- வடிவுடை மாணிக்க மாலை மற்றும் திருவொற்றியூர் சிவபெருமான் மீது பாடிய பாடல் எழுத்தறியும் பெருமாள் மாலை ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

**இயற்றிய உரைநடை நூல்கள்:**

- மனுமுறை கண்ட வாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**பதிப்பித்த நூல்கள்**

- சின்மய தீபிகை
- ஒழிவிலொடுக்கம்
- தொண்ட மண்டல சதகம்
- வள்ளலார் தமிழ் மொழி பற்று மிக்கவர். தமிழ் மொழியை இறவாத நிலை தரும் என்று கருதினார்.
- பயில்வதற்கும் அறிவதற்கும் மிகவும் இலேசுடையதாய் பாடுவதற்கும் துதித்ததற்கும் மிகவும் இனிமை உடையதாய் சாகாக் கல்வியை மிகவும் எளிமையாய் அறிவிப்பதாய், திருவருள் வரத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றிலேயே பற்று வைத்து பல்வகை தோத்திர பாடல்களை பாடுவித்தருளீனீர் என்று கூறியுள்ளார்.

**இராமலிங்கனாரின் உயிரிரக்கம்**

- உயிர் இரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றார்.
- கடவுளின் பெயரால் உயிர் கொலை செய்வதை அறவே வெறுத்தார்.
- சிறு தெய்வ கோயிலை கண்டு நடுங்கினார்.
- போரினால் உண்டாகும் கொடுமைகளை அறிந்து வருந்தினார்.
- போரில்லா உலகை படைக்க விழைந்தார். இதனை

..................... உலக அரசு ஆள்வோர்

உறைமுடி வாள்கொண்டு ஒருவரை ஒருவர்

உயிர் அறச்செய்தனர் எனவே

தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாம்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

தளர்ந்து உளம் நடுங்கிநின்று அயர்ந்தேன் என்று கூறினார்.

- அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும். ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் செய்ய வேண்டும் என்று வேண்டினார்.

**பசிப்பிணி மருத்துவர் வள்ளலார்**

- ‘வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்று பயிர்கள் வாட தாம் வாடினர்.
- வடலூரில் சத்திய தருமசாலையை நிறுவி சாதி, மத வேறுபாடு இன்றி பசித்தோருக்கெல்லாம் உணவிட்டார்.
- அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியை போக்கி வருகின்றது.

**சமரச சுத்த சன்மார்க்கம்**

- வள்ளலார், இறைவன் ஒருவனே: அவன் ஒளி வடிவினன் என்பதையும், அருட்பெருஞ்ஜோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்கு தனிப்பெருங் கருணையே கருவி என்பதையும், உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை வடலூரில் நிறுவினார்.
- இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றுவதற்காக, வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினர்.
- அதனால்தான் பாரதியார் இவரை **புது நெறி கண்ட புலவர்** என்று போற்றினார்.

**சமரச சன்மார்க்கத்தின் நோக்கங்கள்**

- சங்கடம் விளைவிக்கும் சாதிகளையும், மதத்தையும் தவிர்த்தேன் என்று கூறினார்.
- சாதி, மத, சமய, இனவேறுபாடு கூடாது.
- எவ்வுயிரையும் கொல்லலாகாது, புலால் புசித்தல் கூடாது.
- எல்லா உயிர்களையும் தம்முயிர் போல எண்ண வேண்டும்.
- ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும்.
- உலக மக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தல் வேண்டும்.

**<u>வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள்</u>**

- தந்தை, தாய் மொழியை தள்ளி நடக்காதே.
- குருவை வணங்க கூசாதே.
- வெயிலுக்கு ஒதுங்கும் விருச்சம் அழிக்காதே.
- மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே.
- நல்லோர் மனத்தை நடுங்க செய்யாதே.
- பொருளை இச்சித்து பொய் பேசாதே.
- ஏழைகள் வயிறு எறிய செய்யாதே.
- பசித்தோர் முகத்தை பாராதிராதே.
- இரப்போர்க்கு பிச்சை இல்லை எனாதே.
- தானம் கொடுப்போரை தடுத்து நிறுத்தாதே.

**வள்ளலாரின் பன்முக ஆற்றல்கள்**

| | | |
|---|---|---|
| சிறந்த சொற்பொழிவாளர் | பசிப்பிணி போக்கிய அருளாளர் | பதிப்பாசிரியர் |
| போதகாசிரியர் | சித்த மருத்துவர் | நூலாசிரியர் |
| உரையாசிரியர் | இறையன்பர் | இதழாசிரியர் |
| ஞான ஆசிரியர் | அருள் ஆசிரியர். | |

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in